Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, OCTOBER 12, 2023

வியாழக்கிழமை ஒக்டோபர் 12, 2023 | ஒளி: 09 கதிர் 104 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



# கண் நோய் கவனம்

கொழும்பில் பாடசாலை மாணவர்களிடையே கண் நோய் வேகமாக பரவி வருவதாக வலயக் கல்வி அலுவலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு வலய பணிப்பாளர் பி.ஆர். தேவபந்து அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் கடிதம் அனுப்பி இது தொடர்பில் எச்சரித்துள்ளார்.

கண் நோயால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இருந்தால், உடனடியாக பாடசாலை மருத்துவ அலுவலர் அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்து பரிந்துரைகளை பெற வேண்டும் என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பாடசாலையில் கண் நோயால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இருந்தால் அவர்கள் மற்ற மாணவர்களிடமிருந்து தனித்தனியாக வைக்கப்படுவார்கள் என்றும் வட்டாரக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கொட்டாஞ்சேனை மத்திய மகா வித்தியாலயத்தின் 6, 7 மற்றும் 8 தர மாணவர்களின் கண் நோய் காரணமாகவே அதிபர்களுக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# மாணவர்களுக்கு மதிய உணவு



அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் இலவச மதிய உணவு வழங்கும் நோக்கில் பிரான்ஸ் அரசாங்கம் உட்பட பல தரப்பினருடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கலந்துரையாடல்களுக்கு இலங்கை அதிகபட்ச பங்களிப்பை வழங்கி வருவதாகத் தெரிவித்த அமைச்சர், 2030ஆம் ஆண்டுக்குள் அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலை மதிய உணவை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

இதுவரை கலந்துரையாடப்பட்ட தரப்புகளிடமிருந்து சாதகமான பதில்கள் கிடைத்துள்ளதாகவும், இத்திட்டத்தை தொடர தன்னால் இயன்றவரை முயற்சிப்பதாகவும் அவர் கூறினார்.

தொடர்ச்சி P2




## முழு ஒத்துழைப்பை வழங்க IMF உறுதி

கடனை நிலைநிறுத்துவதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு சர்வதேச நாணய நிதியம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் முதல் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கீதா கோபிநாத் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தலைமையிலான இலங்கைக் குழுவிற்கும் மொராக்கோவில் உள்ள மராகேச்சில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம் உலக வங்கிக் குழு சந்திப்புகளின் ஓர் அங்கமாக இடம்பெற்ற சந்திப்பின் போதே இது தெரிவிக்கப்பட்டது.

இலங்கை பல்வேறு துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றத்தை சர்வதேச நாணய நிதியத்தின் முதல் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் பாராட்டியதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

சிங்களவர்கள் அல்லாதவர்களின் கணிசமான வாக்குகளை

# “நீங்கள் இழப்பீர்கள்”

## ஜனாதிபதிக்கு விக்னேஸ்வரன் காட்டமான கடிதம்



தமக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் ஏமாற்றி, காலத்தை இழுத்தடித்து வரும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தொடர்பில் கடுமையான அதிருப்தியை வெளியிட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், எதிர்வரும் தேர்தலில் சிங்களவர்கள் அல்லாதவர்களின் கணிசமான வாக்குகளை நீங்கள் இழப்பீர்கள். சிங்கள வாக்குகள் சிங்கள வேட்பாளர்கள் மத்தியில் பிரிக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

தொடர்ச்சி P2

## பந்தென எத்தியவரின் பாதத்தை பதம் பார்த்த ஹக்கப்பட்டாஸ்

ஷேன் செனவிரத்ன

வீதியோரத்தில் பந்துப்போன்று கிடந்த ஒன்றை எத்திய 16 வயதான சிறுவன், அது வெடித்ததில், பாதத்தில் கடுங்காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம், கண்டி, அலதெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உல்லன்துபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## பரீட்சார்த்தி பௌசருக்கு பலி



தரம் 05 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை நாடளாவிய ரீதியில் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அந்த பரீட்சைக்காக ஆங்காங்கே கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

அனுராதபுரம், தலாவ நகரில் இடம்பெற்ற கருத்தரங்கில் பங்குப்பற்றுவதற்காக தன்னுடைய தாயுடன் மகள் வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர்.

தலாவ நகரிலுள்ள சுற்றுவட்டத்தில் எரிபொருள் பௌசருடன் மோதி, கடுமையான காயங்களுக்கு உள்ளான நிலையில், 10 வயதான மாணவி அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

# மனித விற்பனை:சீனப் பிரஜை கைது

தாய்லாந்தில் தொழில்வாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி, சட்டவிரோதமான முறையில் மியன்மார் மற்றும் லாவோஸுக்கு நபர்களை அழைத்துச் சென்று, மனித வர்த்தகத்தில் ஈடுபட்டார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் சீனப் பிரஜை ஒருவர் (வயது 54) கைது செய்யப்பட்டுள்ளார்.

வர்த்தக விசாரணை மற்றும் சமுர்த்தி குற்ற விசாரணை பிரிவுக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில், பத்தரமுல்லை, பிரதேசத்தில் வைத்தே செவ்வாய்க்கிழமை (10) இவர் கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2



## மின்சார சொக் கொடுக்க அனுமதி

மின்சார சபையின் கோரிக்கைக்கு அமைவாக மின்கட்டண அதிகரிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு அங்கிகாரம் வழங்க முடியும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில், செவ்வாய்க்கிழமை (10) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஆணைக்குழுவின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். கட்டணத்தை உயர்த்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் முதல் இந்த திட்டம் நடைமுறைக்கு வரும். மேலும், பொதுப் பயன்பாட்டுச் சட்டத்தின்படி பொதுமக்களின் கருத்துகளைப் பெற 21 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## கங்குவேலி குளம் சிலரால் ஆக்கிரமிப்பு

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை, கங்குவேலி குளத்தின் பகுதிகள் சிலரினால் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கங்குவேலி குளத்தினுள் சிலர் அத்துமீறி விவசாயம் மேற்கொள்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாகவும் இதனால் குளத்தின் பகுதிகள் சேதமாக்கப்பட்டு

தொடர்ச்சி P2



# கடன்மன்னிப்பை வழங்க ஆராயவும்

## சீனாவுக்கு பிலிப்பைன்ஸ் ஆலோசனை

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக விரக்தியடையாமல் சவால்களை எதிர்கொள்ளவேண்டும் என இலங்கையிடம் தெரிவித்துள்ள பிலிப்பைன்சின் நிதியமைச்சர் பெஞ்சமின் ஈ டியோகோனோ, இலங்கைக்கு கடன்மன்னிப்பை வழங்குவது குறித்து சீனா ஆராயவேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளார்.

கொவிட் பெருந்தொற்றின் பின்னர் பிலிப்பைன்ஸ் எதிர்கொண்ட பொருளாதார சவால்களை நினைவுகூர்ந்துள்ள அந்த நாட்டின் நிதியமைச்சர் வலுவான கட்டமைப்பு சீர்திருத்தங்களே நாடு மீண்டும் வலுவான நிலைக்கு வருவதற்கு உதவியது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு கடன்மன்னிப்பை வழங்குவது குறித்து சீனா ஆராயவேண்டும் இல்லாவிட்டால் இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்தும் பலவீனமாகவே காணப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.இது முன்னர் இடம்பெற்றுள்ளது தற்போதும் அதனை செய்யலாம் என குறிப்பிட்டுள்ள அவர் இலங்கை தனது வளங்களை திரட்டுவதை மதிப்பீடு செய்யவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## விடுதிகளில் ‘இரவு ரெய்டு’



“பல்கலைக்கழக விடுதிகளில் இடம்பெறும் பகிடிவதைகளைத் தடுக்கும் விதமாக, பல்கலைக்கழக விடுதிகளை இரவு வேளைகளில் சோதனைக்கு உட்படுத்த தீர்மானித்துள்ளதாக” உயர்கல்வி இராஜாங்க அமைச்சர், சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## SLT-MOBITEL புதிய Whistleblowing விதி

SLT-MOBITEL தனது சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) கொள்கைகளை வலிமைப்படுத்தும் வகையில் மேம்படுத்தப்பட்ட Whistleblowing விதிமுறையை அறிமுகம் செய்துள்ளது. இதில் SLT-MOBITEL இலிருந்து முற்றிலும் சுயாதீனமான குழுவினர் அடங்கியிருப்பதுடன், அறிவிக்கப்படும் சம்பவங்கள் தொடர்பான ஆரம்பக்கட்ட விசாரணைகளை முன்னெடுப்பார்கள்.

தொடர்ச்சி P2



## இந்தியாவில் இருந்து திரும்பிய மூவர் கைது

புகஜிந்தன்

இந்திய மீனவர்களின் படகின் மூலமாக, இலங்கைக்கு சட்டவிரோதமாக திரும்பியுள்ள மூவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## பந்தென எத்தியவரின் பாதத்தை பதம் பார்த்த ஹக்கப்பட்டாஸ்

அந்த பந்து, காட்டுப்பன்றிகளை வேட்டையாடுவதற்காக பயன்படுத்தப்படும் ஹக்கப்பட்டாஸ் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகிலிருந்த வீடுகளை சோதனைக்கு உட்படுத்திய போது, வீடொன்றில் இருந்து ஹக்கப்பட்டாசுகள் ஒன்பதுடன் இருவர் கைது செய்யப்பட்டனர் என்றும் அலதெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

அவ்விருவர்களில் ஒருவர், இராணுவத்தில் இருந்து தப்பியோடிய 24 வயதானவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். வீட்டில் ஹக்கப்பட்டாஸ் தயாரித்து, காட்டுப்பன்றிகள் பயணிக்கும் வழிகளில் இரவு வேளைகளில் வைத்துவிடுவார்கள்.

அந்த ஹக்கப்பட்டாசுகளுக்கு சிக்கிக்கொள்ளாவிடின் அவற்றை காலை வேளையில் மீளவும் சேகரித்துக்கொள்வர் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நாட்களில் அப்பகுதியில் கடுமையான மழை பெய்வதால், அதிலொரு அக்கப்பட்டாசு, வீதிக்கு உருண்டு வந்திருக்கலாம் என்றும் அதனையே பந்தென நினைத்து அச்சிறுவன் எத்தியிருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுவனின் பாதத்தில் சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிவருமென வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர் என்பதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக அலதெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

## இந்தியாவில் இருந்து திரும்பிய மூவர் கைது

யுத்தக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியாவுக்கு சென்ற நிலையில் அங்கு வாழ முடியாத சூழலில் நாட்டுக்கு மீண்டும் திரும்பியுள்ளனர்.

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற போது 1990 ஆம் ஆண்டு குடத்தனை வடக்கைச் சேர்ந்த தாயாரும் அவரது இரண்டு பிள்ளைகளும் தமிழகத்திற்கு சென்று சென்னையில் 30 வருடங்களாக வாழ்ந்து வந்துள்ளனர்.

இந்நிலையில், இந்திய மீனவர்களின் உதவியுடன் படகு மூலம், யாழ் வடமராட்சி குடத்தனை பகுதியில் வந்திறங்கி உறவினர் வீடு ஒன்றில் தங்கியிருந்த நிலையில் பருத்தித்துறை பொலிஸாரால் செவ்வாய்க்கிழமை (10) கைது செய்யப்பட்டுள்ளனர்.

### மாளிகாகந்த துப்பாக்கிச் சூடு

## மூவர் கைது: காரும் சிக்கியது

மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்துக்கு அருகில் செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பிலான குற்றச் செயல்களுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் மூவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் இராஜகிரிய ஒபேசேகரபுரவில் செவ்வாய்க்கிழமை (10) சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

வெல்லம்பிட்டி சேதவத்தை பகுதியில் வைத்து போலியான இலக்கத் தகட்டை பொருத்தி அதன் மூலம் கொலையாளிகள் தப்பிச் செல்ல பயன்படுத்திய வெள்ளை நிற காரும் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் மற்றும் ஒபேசேகரபுர, ராஜகிரிய பிரதேசங்களைச் சேர்ந்த 36 மற்றும் 62 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்துக்கு அருகில் முச்சக்கர வண்டியில் பயணித்தவர்கள் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதியன்று துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதில், 6 வயது சிறுமி கடும் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்ததுடன் அவருடைய தந்தை படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# “நீங்கள் இழப்பீர்கள்”

## ஜனாதிபதிக்கு விக்னேஸ்வரன் காட்டமான கடிதம்

அண்மைக்கால வெளிநாட்டு விஜயத்தின் நீங்கள் பெற்ற முழு வெற்றியையுமே நீங்கள் ஜேர்மன் ஊடகவியலாளருக்கு அளித்த பேட்டி அப்படியே களங்கப்படுத்தி விட்டது. நீங்கள் கடும் போக்குவாத சிங்கள வாக்காளர்களின் ஆதரவை உறுதிப்படுத்துவதற்காக அப்படிச் செய்திருக்க கூடும் என்றும் குறிப்பிட்டுள்ளாரி.

பொதுவான தமிழ் வேட்பாளர் ஒருவர் குறித்து சிந்திக்கத் தலைப்படும் நிலைமை தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது. உறுதியளித்த பல விடயங்களை நீங்கள் நிறைவேற்ற தவறிவிட்டீர்கள் என்றும் குறிப்பிட்டுள்ள விக்னேஸ்வரன், மாகாண சபைகள் தொடர்பில் ஆலோசனை சபையை அதிகாரத்துடன் செயல்பட வைக்கும் ஏற்பாடு நடைபெறவில்லை. அந்த ஆலோசனைச் சபைக்கு அதிகாரம் அளிக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டு, அதனை செப்டம்பர் முதலாம் திகதியில் இருந்து இயக்குவதற்கும் ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

ஆளுநர் மாற்றம் நடக்கவில்லை. அதே ஆளுநர் மாறாமல் தொடர்கிறார். வடக்கு மாகாண பிரதம செயலாளரும், மாகாண சுகாதார பணிப்பாளரும் பதவிகளில் தொடர்கின்றனர். எங்கள் ஆதரவாளர்கள் இவற்றால் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளனர் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## முழு ஒத்துழைப்பை வழங்க IMF உறுதி

இலங்கையின் ஊழலுக்கு எதிரான மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான தற்போதைய பணிகள் குறித்தும் இரு தரப்பினரும் கலந்துரையாடியதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## விடுதிகளில் ‘இரவு ரெய்டு’

”பல்கலைக்கழக விடுதிகளில் நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 05 மணி வரையான காலப்பகுதியில் அதிகளவிலான பகிடிவதைகள் இடம்பெறுவதாகத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்நிலையில் பல்கலைக்கழகங்களில் பகிடிவதையைத் தடுப்பதற்கான தேசிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்நடவடிக்கையில் பல்கலைக்கழக ஒழுக்காற்று அதிகாரிகளும், மாணவ ஆலோசகர்களும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அதுமட்டுமல்லாது பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக 076-5453454 என்ற WhatsApp இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் கிடைக்கப்பெறும் அனைத்து முறைப்பாடுகள் தொடர்பிலும் விரைவான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும்” என்றும் உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

## மனிதர்களை விற்பனைச் செய்த சீனப் பிரஜை கைது

தாய்லாந்தில் கணினி தகவல்கள் தரவேற்றல் மற்றும் நுகர்வோர் சேவை நிறுவனத்தில் வேலைவாய்ப்பை பெற்றுத்தருவதாக கூறி இலங்கை பிரஜைகள் சிலரிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய்களை பெற்றுக்கொண்டு இந்த மனித வர்த்தகத்தை அவர் முன்னெடுத்திருந்தார் என்பது விசாரணைகளின் ஊடாக அறியமுடிகின்றது.

## SLT–MOBITEL புதிய Whistleblowing விதி

மேம்படுத்தப்பட்ட SLT-MOBITEL குழும Whistleblowing விதிமுறையினூடாக நிறுவனத்தின் ஊழியர்கள், நிறுவனத்துடன் தொடர்புடைய எந்தவொரு பங்காளர்களுக்கு அல்லது பொது மக்களுக்கு நிறுவனத்துக்கு, அதன் வாடிக்கையாளர்கள், பங்காளர்கள், ஊழியர்கள், முதலீட்டாளர்கள் அல்லது பொது மக்களுக்கு பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என சந்தேகிக்கப்படும் தவறான நடத்தை தொடர்பில் அறிக்கையிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அறிக்கையிடப்படும் சம்பவங்கள் தொடர்பில் இந்த சுயாதீன Whistleblowing குழு அலகினால் ஆரம்பகட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, அந்த அறிக்கை கண்காய்வு குழுவுக்கு ஒப்படைக்கப்படும். அதனைத் தொடர்ந்து பிரதம உள்ளக கணக்காய்வாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள வழிகாட்டும்.



ஸ்ரீ லங்கா ரெலிகொம் பணிப்பாளர் சபையின தவிசாளர் ரியாஸ் மிஹுலர்

ஸ்ரீ லங்கா ரெலிகொம் தவிசாளர் ரியாஸ் மிஹுலர் கருத்துத் தெரிவிக்கையில், “சுயாதீன Whistleblower குழு என்பது, ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் உயர் தரம் வாய்ந்த கூட்டாண்மை ஆளுகை செயற்பாடுகளுக்கான அர்ப்பணிப்பின் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. ஒழுக்கமான ஆளுகை மற்றும் பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை குடிமகன் போன்றன நாம் எவ்வாறு வியாபாரத்தை முன்னெடுக்கின்றோம் என்பதில் அடிப்படையான அம்சங்களாக அமைந்துள்ளன என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். மீளாய்வு செய்யப்பட்ட Whistleblowing விதிமுறையானது, நிறுவனத்தினுள் இடம்பெறும் பாரதூரமான தவறான செயற்பாடுகளைப் பற்றி அறிவிப்பவர்களுக்கு தமது கரிசனைகளை எவ்வித அச்சமும் இன்றி அல்லது தமக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என கருதாமல் தெரிவிப்பதற்கு பாதுகாப்பான நாளிகைகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த நவீன திட்டத்துடன், நிலைபேறான வியாபார வளர்ச்சிக்கான அத்தியாவசியமான அங்கமாக, ஒவ்வொரு வியாபாரப் பிரிவிலும் ESG செயன்முறைகள் மற்றும் கொள்கைகளை SLT-MOBITEL முன்னெடுக்கும்.” என்றார்.

பக்கசார்பற்ற Whistleblowing அலகின் செயற்குழுவில், கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதியியல் பீடத்தின் மனித வளங்கள் முகாமைத்துவ பிரிவின் பேராசிரியர். பவித்திரா கைலாசபதி, தொழில் வழங்குநர் சம்மேளனத்தின் முன்னாளர் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி கோதாபய திசாநாயக்க, சுயாதீன ஆலோசகராக இயங்கும் பட்டயக் கணக்காளர் மொஹமட் அவாத் மற்றும் அலகின் செயலாளராக இயங்கும் ரீடா கேர்ன் ஆகியோர் அடங்கியுள்ளனர்.

Whistleblowing அலகை பல்வேறு அறிக்கையிடல் நாளிகைகளினூடாக சென்றடைய முடியும், அவற்றில் Voice Mail Service/WhatsApp ஊடாக Ethics Hotline 070 568 2121, மின்னஞ்சல் வாயிலாக whistleblower@sltnet.lk அல்லது தபால்கள் மற்றும் ஆவணங்களை த.பெ. இல. 2323, கொழும்பு 10 எனும் முகவரிக்கு அனுப்புவது போன்றன அடங்கியுள்ளன.

நாம் இயங்கும் முறையில் மாற்றங்களை ஏற்படுத்தி மற்றும் எமது கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு செயற்பாடுகளுக்கு அப்பால் சென்று, தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறையினருக்கு சமநிலையான சூழல், சமூக மற்றும் ஆளுகை கரிசனைகள் தொடர்பில் கவனம் செலுத்தி எவ்வாறு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்பதை குறிக்கும் சர்வதேச கட்டமைப்பாக ESG அமைந்துள்ளது. SLT பிரகாசமான நாளையை உருவாக்குவதற்கான பரிபூரண வழிமுறைகளை கொண்டிருப்பதால், SLT-MOBITEL இன் ESG திட்டங்கள் புதிய நியமங்களை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன.

## மாணவர்களுக்கு மதிய உணவு

முல்லைத்தீவு மல்லாவி நடுநிலைப் பாடசாலையில் செவ்வாய்க்கிழமை (10) இடம்பெற்ற விவசாயக் கண்காட்சியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## பரீட்சார்த்தி பௌசருக்கு பலி

சம்பவத்தில் சிறுமியின் தாய் (வயது 47) கடுங்காயங்களுக்கு உள்ளான நிலையில், அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எரிபொருள் பௌசரின் சாரதியான யட்டியந்தோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட 34 வயதான நபர், பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## கங்குவேலி குளம் சிலரால் ஆக்கிரமிப்பு

வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்டு குளத்தின் ஆக்கிரமிப்பை தடைசெய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

கங்குவேலி கிராமத்தைச் சேர்ந்த 750க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இக்குளத்தை நம்பி விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்குளத்திற்குள் சிலர் அத்துமீறி விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருவதுடன் பாரிய இயந்திரங்களைக் கொண்டு குளத்தின் அணைக்கட்டுகளை சேதமாக்கி வருவதாகவும் கால்வாய்களை வெட்டி சேதப்படுத்துவதாகவும் தெரிவிக்கின்றனர்

இது தொடர்பாக திருகோணமலை மாவட்ட செயலகத்தில், செவ்வாய்க்கிழமை (10) இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் பின்னர் ஆளுநரை சந்தித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இதனை தடுத்து நிறுத்துமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும், சம்மேளன உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதனடிப்படையில் கிழக்கு ஆளுநரின் பணிப்புரைக்கமைய திருகோணமலை பிராந்திய நீர்பாசனத் திணைக்களப் பணிப்பாளரையும் சந்தித்து உரையாடியதாகவும் குறித்த சட்டவிரோத நடவடிக்கை தொடர்ந்து வருவதாகவும் விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

இக்குளமானது 2019ஆம் ஆண்டு 24 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்பு செய்யப்பட்டதாகவும் மூதூர் பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸாரிடம் முறையிட்டபோதும் இது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படவில்லை எனவும் விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

அத்துடன் இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்டு குளத்தின் ஆக்கிரமிப்பை நிரந்தரமாக தடைசெய்து இக்கிராம மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அரச அதிகாரிகள் முன்வர வேண்டும் என கங்குவேலி திருக்கரைசயம்பதி விவசாய சம்மேளனத்தினர் கோரிக்கை விடுக்கின்றனர்.



## கிழக்கு மாகாண ஆளுநருடன் அமெரிக்க குழு சந்தித்துப் பேச்சு

அப்துல்சலாம் யாசீம்

அமெரிக்க சர்வதேச மத சுதந்திரத்திற்கான ஆணையாளருக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

அமெரிக்க சர்வதேச மத சுதந்திரத்திற்கான ஆணையாளர் டேவிட் கெரி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை ஆளுநர் செயலகத்தில் மரியாதை நிமித்தமாக புதன்கிழமை (11) சந்தித்தார்.

இச்சந்திப்பில் சமய நடவடிக்கைகள் தொடர்பான தற்போதைய நிலைமை குறித்து கலந்துரையாடியதுடன், கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து சமூகத்தினரின் மத உரிமைகளைப் பாதுகாப்பதில் ஆளுநரால் மேற்கொள்ளப்பட்ட அண்மைய நடவடிக்கைகளுக்கு பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் தூதுவர் ஸ்டீபன் ஸ்னெக், தூதுவர் ஜேமி ஸ்டாலி, கண்காணிப்பு கொள்கை ஆலோசகர் செமா ஹசன், கொள்கை ஆய்வாளர் ரூபி உட்சைட், அமெரிக்க தூதரகத்தின் அரசியல் அதிகாரி ஷந்தீப் குரூஸ், அமெரிக்கா கொழும்பு தூதரகத்தின் அரசியல் நிபுணர் ஆகியோர் உடனிருந்தனர்.

# சாதக, பாதகங்கள் பற்றி இருதரப்பு ஆராய்வு

முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் கஃபே அமைப்பின் பிரதிநிதிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று ராஜகிரியவில் அமைந்துள்ள கஃபே தலைமை காரியாலயத்தில் செவ்வாய்க்கிழமை (11) இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போது, தொடர்ச்சியாக தேர்தல்கள் பிற்போடப்படுவதன் பாதகங்கள், அரசியலில் பெண்களின் வகிபாகங்கள், பெண் அரசியல்வாதிகள் எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் மற்றும் சவால்களை எதிர்கொண்டு அரசியலில் பெண்கள் நிலைத்திருக்க செய்வதன் அவசியம் போன்றவை தொடர்பான விடயங்களும், சாதக பாதகங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இந்த கலந்துரையாடலில் கஃபே தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மகீன் அ, நிர்வாக பணிப்பாளர் சுரங்கி ஆரியவங்ஷ மற்றும் சட்டத்துறை பணிப்பாளர் ஹரேந்திர பானகல ஆகியோர் கலந்து கொண்

# “காலம் சரியானதை நிரூபித்து வருகிறது”

பேரழிவுகளையும் உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்ற பாலஸ்தீன் - இஸ்ரேல் யுத்தம் தொடர்பாகக் கரிசனையை வெளிப்படுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உரிமையும் சமாதானமும் பாலஸ்தீனத்தில் நிலவ வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன - இஸ்ரேல் விவகாரத்தின் போக்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் என்ற யதார்த்தினை 1978ஆம் ஆண்டு அங்குப் பயிற்சிக்குச் சென்றபோதே தன்னால் உணரக்கூடியதாக இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் புதன்கிழமை (11) நடைபெற்ற நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும் இதுதொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ், “பாலஸ்தீன மக்களின் உணர்வுகளையும் ஆழ்மன விருப்பங்களையும் நான் நேரில் கண்டிருக்கிறேன், அங்கு நான் ஆயுதப்பயிற்சி எடுத்தவேளை அவர்களது போராட்டத்தில் கூட பங்கெடுத்திருக்கிறேன்,

எமது மண்ணிலும் நானிருந்த எமது அன்றைய ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பே கண்காட்சிகளை நடத்தி பாலஸ்தீன விடுதலைக்குப் பகிரங்க ஆதரவைத் தெரிவித்திருந்தது.

இதேவேளை, பாலஸ்தீன மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும், நிரந்தர சமாதானம் அங்கு நிலவ வேண்டும், மக்களின் நிலங்கள் மக்களுக்கே சொந்தமென்ற உரிமம் பாலஸ்தீனத்தில் மட்டுமல்ல எங்கும் நிலவ வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

மேலும், பலஸ்தீன விவகாரத்தினை போன்றே எமது மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு சரியான வழிமுறையை முன்கூட்டியே 30 வருடங்களுக்கு முன்னர் தன்னால் முன்மொழியப்பட்டபோது ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள் தற்போது, பேரழிவுகளுக்குப் பின்னர் ஏற்றுக்கொண்டிருப்பதையும் அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.





# மர்ம நபர்கள் கடத்தல்காரர்களா?

எஸ்.றொசேரியன் லெம்பேட்

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே முனைக்காடு கடற்கரை பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் இலங்கை படகு ஒன்று செவ்வாய்க்கிழமை (10) நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கைவிடப்பட்ட நிலையில் இருந்த குறித்த படகில் இருந்து மர்ம நபர்கள் இருவர் அதிவேகமாக தப்பியோடியதாக அப்பகுதி உள்ள மீனவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதையடுத்து அப்பகுதிக்கு சென்ற பொலிஸார், இலங்கை படகை மீட்டு கடத்தல் காரர்கள் யாரேனும் வந்தார்களா? அல்லது சமூக விரோதிகள் யாரேனும் வந்தார்களா என்ற கோணத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ”முஸ்லிம் சமூகமும் விதிவிலக்கல்ல”

நூருல் ஹுதா உமர்



இந்த நாட்டில் மேற்கத்தையவர்களின் சம்பள பட்டியலில் அதிகமான அரசியல்வாதிகள், அதிகாரிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதில் முஸ்லிம் சமூகமும் விதிவிலக்கல்ல. முஸ்லிம் சமூகத்தின் உயர்ந்த திறமைசாலிகள் என்று அடையாளப் படுத்தப்படுபவர்கள் மேற்கத்தையவர்களின் சம்பள பட்டியலில் உள்ளனர் என்று திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கல்முனையில் செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.


மேலும் அவர் கூறியதாவது, மேற்கத்தையவர்களின் சம்பள பட்டியலில் இருந்து கொண்டு, தான் வாழும் எமது மண்ணை காட்டிக்கொடுத்தும் ஊரின் மகிமைகளை கொச்சைப்படுத்திக் கொண்டும், ஊடகங்களில் வந்து தாய் மண்ணையே காட்டிக்கொடுத்துக் கொண்டும், தென்கிழக்கு பிராந்தியத்தில் புகழ் பூத்த ஊரின் மகிமைகளையும், தேவைகளையும் பற்றி மோசமான வார்த்தைகளை கொண்டு கொச்சைபடுத்தி பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும், அவர்களை இலுமினாட்டி வர்க்கமாகவே பார்க்கவேண்டியுள்ளது.

அந்த இலுமினாட்டி வர்க்கத்தினர் மாதாமாதம் சம்பள பட்டியல் (Payroll) இருந்து கொண்டு எமது கிழக்கு பிராந்திய எதிர்கால சந்ததிகளை நாசமாக்கும் பணியையே சரியாக செய்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் தாய்மண்ணையும், கிழக்கு பிராந்தியத்தையும் மேற்கத்தைய சக்திகளுக்கு காட்டிக்கொடுப்பதுடன், நாட்டுக்கு எதிராக செயற்படும் சக்திகளுடன் கரம் கோர்த்து இலுமினாட்டிகளாக மாறி “பசுத்தோல் போத்திய புலிகளாக” சமூகத்தில் உலா வந்துகொண்டிருக்கிறார்கள்.

நாட்டின் பொருளாதாரம் சீரழிந்து இருக்கும் இந்த நிலையில் அதை கட்டியெழுப்பும் தலைமையை உருவாக்குவது பற்றி நாம் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது எமது நாட்டுக்கு ஜனாதிபதியாக மக்களின் வாக்குகளினால் ஒருவர் தெரிவாவதை விட தத்தமது நாடுகளுக்கு விருப்பமான ஒருவர் ஆட்சியில் அமர்வதையே மேற்கத்தைய நாடுகளும், அந்நியநாடுகளும் ஆசிய நாடுகளும் விரும்புகிறது என தெரிவித்துள்ளார்.



# அழகு

சுதத். ஹேவா

நாட்டின் பல பாகங்களில் கடந்த சில நாட்களாகக் கடுமையான மழை செய்த வருகின்றன. இதனால் ஆங்காங்கே வெள்ளப்பெருக்கும் மற்றும் மண்சரிவு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை, வற்றியிருந்த குளங்களும் நீர்த்தேக்கங்களும் நிரம்பிக் கொண்டு வருகின்றது.

அதுமற்றுமன்றி, மத்திய மலை நாட்டிலுள்ள நீர்வீழ்ச்சிகளில் நீர்வரத்து அதிகரித்து அழகாகக் காட்சியளிக்கின்றன.

# தந்தை– மகள் மீது அமிலத் தாக்குதல்



அசிட் வீச்சுத் தாக்குதலில் தந்தையும் மகளும் காயமடைந்துள்ள சம்பவமொன்று முல்லேரிய - அம்பத்தளை பகுதியில் புதன்கிழமை (11) காலை இடம்பெற்றுள்ளதாக முல்லேரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தையும் மகளும் இந்த அமிலத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வீதியில் நின்றிருந்த ஒருவரால் இந்த அசிட் வீச்சு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த தந்தை, கொழும்பு கண் வைத்தியசாலையிலும் மகள் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# மரத்திலிருந்து விழுந்து ஒருவர் மரணம்

தென்னை மரத்தால் விழுந்து, நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் திங்கட்கிழமை (09) உயிரிழந்துள்ளார். புத்தூர் கிழக்கு, புத்தூர் பகுதியைச் சேர்ந்த பொன்னுத்துரை கணேசலிங்கம் (வயது 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் கடந்த 6ஆம் திகதி, தென்னங்கள் உற்பத்தி தொழில் செய்வதற்காக ஏறிய நிலையில் வழுக்கி கீழே விழுந்ததுள்ளார்.

இந்நிலையில், அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான பிரேதப் பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

# விபத்தில் பெண் பொலிஸ் உயிரிழப்பு

நிதர்ஷன் வினோத்

தம்புள்ளை பிதேசத்தில் செவ்வாய்க்கிழமை (10) மோட்டார்சைக்கிளுடன் டிப்பர் வாகனமொன்று மோதிய விபத்தில் பருத்துத்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பெண் பொலிஸ் ஒருவர் உயிரிழந்துள்ளார்.



இவ்வாறு உயிரிழந்தவர் தம்புள்ளையைச் சேர்ந்த சாந்திமா ரணசிங்க (வயது- 24) என்பவர் என தெரியவந்துள்ளது.

குறித்த பெண் கலேவல தலகிரியாகம பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, எதிரே வந்த டிப்பர் வாகனத்துடன் மோதியே விபத்துக்குள்ளானதாக தெரியவந்துள்ளது.

இதில் படுகாயமடைந்த பெண் பொலிஸாரை தம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பலனின்றி செவ்வாய்க்கிழமை (10) மாலை உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காதலியின் நிர்வாண சுவரொட்டி: இளைஞன் கைது

அதிருப்தியடைந்த காதலியின் நிர்வாணப் புகைப்படங்களை பெரிதாக்கி அவரது வீட்டின் முன் வாயிலில் ஒட்டிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கெஸ்பேவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடம் இருந்து சிறுமியின் மேலும் 4 நிர்வாண புகைப்படங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன், அவை பெரிதாக்கப்பட்டு திருத்தப்பட்டுள்ளன.

மேலும் நிர்வாண புகைப்படங்கள் அடங்கிய மடிகணினியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

23 வயதுடைய முறைப்பாட்டாளரும் சந்தேகநபரும் மஹரகமவில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிந்ததாகவும், பாடசாலை நண்பரான சந்தேக நபருடன் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் தொடர்பு வைத்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கெஸ்பேவ பொலிஸ் நிலைய கட்டளைத் தளபதி பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்சன சமரசிங்கவின் பணிப்புரையின் பேரில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# அதிபர் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு

லுணுகலை ஸ்ரீ இராமகிருஸ்ணா தமிழ் மகா வித்தியாலயத்துக்கு நியமிக்கப்பட்ட அதிபர் தகுதியற்றவர் என கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய, பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷுக்கும் ஊவா மாகாண ஆளுநர் A.J.M.முசாமில்லுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, ஊவா மாகாணத்தில் நேர்முக பரீட்சை ஒன்றை நடத்தி, அந்த நேர்முக பரீட்சையில் தகுதியான அதிபரை பாடசாலைக்கு நியமிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அதுவரை பாடசாலையின் பிரதி அதிபரை பதில் அதிபராகக் கடமையாற்றும் படியும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# கண்ணுக்கெட்டாத தூரத்தில் கானல் நீராய் இருக்கும் நீண்ட தூர சிந்தனை

அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் சிலர் அவ்வப்போது விடுக்கும் அறிவிப்புகளை கேட்குமிடத்து, காதுகளுக்கு இனிதாய் இருக்கின்றதே தவிர, நடைமுறையில் சாத்தியப்படாத விடயங்களாகவே இருக்கின்றன. எனினும், பாதிக்கப்பட்ட தரப்புக்களைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட போது, பாடசாலை மாணவர்களுக்கு சலுகை வழங்கப்படுமெனவும், வறுமையான குடும்பங்களில் இருக்கும் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக பருவச்சீட்டு வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டது. எனினும், அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. ஏனெனில், பொருளாதார கஷ்டங்கள் காரணமாக, பாடசாலைகளில் இருந்து இடைவிலகுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. எனினும், எரிபொருட்களின் விலை அதிகரிப்புகளும், போக்குவரத்துக் கட்டணங்களும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. வறுமையான குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இதுமட்டுமே பிரச்சினையாக உள்ளதென நினைப்பது தவறாகும். ஏனெனில், சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டதால், ஒருசில பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இவையும், அம்மக்களின் மீது கடுமையான தாக்கத்தைச் செலுத்தும்.

அப்பியாச கொப்பிகள், சீருடை துணிகள், பாதணிகளின் விலை அதிகரிப்பு மட்டுமன்றி, தையல் கூலி உள்ளிட்ட விலை அதிகரிப்பினால், கடுமையான பாதுகாப்புக்கு முகங்கொடுக்கின்றனர். இதற்கிடையே வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் குடும்பங்களில் கல்விப்பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக பாதணி வழங்கப்படுமென்ற அறிவிப்பும் வெளியாகியுள்ளது.

அத்துடன், அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் 2030ஆம் ஆண்டுக்குள் மதிய உணவு இலவசமாக வழங்கப்படும் என்று அறிவித்துள்ள கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பிரான்ஸ் அரசாங்கம் உட்பட பல தரப்பினருடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அந்த இலவச உணவுக்காக, இன்னும் ஆறு வருடங்கள் காத்திருக்கவேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது. அப்போது, ஆட்சியில் மாற்றம் ஏற்பட்டிருக்கும். இந்த திட்டம் காணாமற் போயிருக்கும் அல்லது தூசுதட்டவேண்டி வரலாம்.

தூரநோக்கு சிந்தனை இருக்கத்தான் வேண்டும். அதற்காக, இப்படி தூரமாக இருக்கக்கூடாது என்பதே எங்களுடைய கருத்தாகும். கடந்தகால படிப்பினைகளை ஒரு பாடமாகக் கொண்டு, எதிர்காலத்தை கவனத்தில் எடுத்து, யதார்த்தத்துக்கு பொருத்தமான வகையில் திட்டங்களைத் தீட்டி, நடைமுறைப்படுத்த வேண்டும். அதுவும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்கும் வகையில் திட்டங்களை வகுக்கவும்.

நடைமுறைக்கு சாத்தியமான, மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஓரளவுக்கேனும் தீர்க்கும் வகையில் சிந்திக்க வேண்டும். பஸ் கட்டணங்களை குறைக்கலாம், பாதணிகளை கட்டாயப்படுத்துவதை தவிர்க்கலாம். பரீட்சைகளை உரிய நேரத்துக்கு நடத்தி, பெறுபேறுகளையும் உரிய நேரத்துக்கு வெளியிட்டு, அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்த்துவதற்கு வழிசமைக்கலாம்.

மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கும் திட்டங்கள் ஏட்டு சுரைக்காயாக இருந்துவிடாது. அவற்றை தேசிய திட்டங்களாக முன்வந்தால், எந்த ஆட்சிமாற்றத்தின் போதும், மாணவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதை நினைவில் கொள்க.



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

கண்டிப்பு கூட, கனிவுதான். சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்க! ஒருவரை முழு மனிதனாக மாற்றுவது, அன்பானவர்களின் கண்டிப்பு அல்லவா?

மெல்ல மெல்ல பட்டைதீட்டப் படுபவர்களில் நாங்களும் ஒருவர். பிறந்தவுடன் முழு மனிதனாகிவிட முடியாது.

ஒவ்வொரு பராயத்திலும், புதுப்புது அனுபவக் குவியல்கள். பெற்றோர், நண்பர்கள், ஆசான்கள், உறவுகள் எனப் பலரும் சொல்லும் அறிவுரைகள், பெரும் செல்வங்களைவிட மேலானது.

சிலவிடயங்களை இளைய தலைமுறையினரிடம் இருந்தும் கற்க வேண்டும். அறிவு பல திசைகளில் இருந்தும் புறப்பட்டு, எங்களிடம் வருகின்றது. இவற்றை நெஞ்சில் இருத்துக! மனம் முழுக்க மழைதான் பெய்ய வேண்டும். சுடு நெருப்பு அல்ல! வார்த்தைகள் குளுமையாகவும் தென்றல் காற்றின் சுகானுபவத்தையும் ஊட்ட வேண்டும்.

கனிவுடன் பழகுதல், இனிமையை வழங்குதல் போலாகும். பாகுபாட்டை நோக்கினால், சமூகமும் அவர்களை நோக்காது.

அன்பைக் காட்டாதவன், தனிமையில் புரள்கின்றான். உலகைத் தூய்மைப்படுத்த, எந்தத் தனிமனிதனையும் புறக்கணித்தலாகாது. அன்பே இன்பம்!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தோல்விகளை மறைப்பதற்காக கதவடைப்பு போராட்டமா?



புருஜோத்தமன் தங்கமயில்

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா அச்சுறுத்தல்களினால் நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், அவருக்காக நீதி கோரி தமிழ்த் தேசியக் கட்சிகள் கதவடைப்பு போராட்டத்தினை எதிர்வரும் 20ஆம் திகதி நடத்தத் தீர்மானித்திருக்கின்றன. நீதிபதி சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட அழுத்தங்கள் அச்சுறுத்தலுக்கு எதிராகத் தமிழ்க் கட்சிகள் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் மனிதச் சங்கிலிப் போராட்டத்தினை நடத்தின. ஆனால், அந்தப் போராட்டத்தில் சில நூற்றுக்கணக்கானவர்களே கலந்து கொண்ட பின்னணியில், அது தோல்விகரமான போராட்டம் என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்டது. மக்களை போராட்டக்களத்தினை நோக்கி அழைத்து வருவதற்கான திராணியைத் தமிழ்க் கட்சிகள் இழந்துவிட்டன என்ற விடயமும் மேலெழுந்தது. பிரதான ஊடகங்கள் தொடங்கி சமூக ஊடகங்கள் வரையில், மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தப்பட்ட விதம், அங்கு நிகழ்த்தப்பட்ட மண்டியிட்டு ஜெபிக்கும் தோரணையிலான அரங்காற்றுகை வரை கேலிக்குள்ளானது. இதனால், தமிழ்க் கட்சிகள் அவசரமாகக் கூடிக் கதவடைப்பு போராட்டத்துக்கான அழைப்பை விடுத்திருக்கின்றன.

முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னரான நாட்களில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவு மெல்ல மெல்ல விரிசல் அடைந்து வந்திருக்கின்றது. ஏனெனில், தமிழ்க் கட்சிகள், அதன் தலைவர்கள் மீதான நம்பிக்கையை மக்கள் வெகுவாக இழந்துவிட்டமையே அதற்கு காரணமாகும்.

முள்ளிவாய்க்கால் கொடூரங்களுக்கு எதிராக நீதி கோரி மக்கள் கனதியான போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அதில், பல போராட்டங்கள் அரசியல் கட்சிகளால் அன்றி பாதிக்கப்பட்ட மக்களால் நடத்தப்பட்டன. அரச புலனாய்வுத்துறை உள்ளடங்கி அரச படைகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் பேரெழுச்சியான போராட்டங்களைக் கடந்த பதின்நான்கு ஆண்டுகளில் மக்கள் நடத்தியிருக்கிறார்கள். அந்தப் போராட்டங்களின் எழுச்சியின் போக்கில், ராஜபக்ஷக்களைத் தோற்கடிக்க வேண்டும் என்கிற உணர்வும் கனதியாக மேலெழுந்தது. அதனால், அதற்காக கருவியாக தேர்தல்களை தமிழ் மக்கள் கையாண்டிருக்கிறார்கள். அதுதான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வரையில் அபரிமிதமான வாக்குகளைப் பெற்று தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற நிலையை அடையக் காரணமானது. ஆனால், ராஜபக்ஷக்கள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், கூட்டமைப்பு நல்லாட்சி அரசாங்கத்தோடு காட்டிய இணக்கமும், அதன் விளைவுகளும் மக்களை பாரியளவு விரக்தியடைய வைத்தது. ஏனெனில், கூட்டமைப்பு மக்களிடம் அளித்த வாக்குறுதிகளை பெரியளவில் நிறைவேற்ற முடியாமல் போனது. அதிக நேரம் நல்லாட்சி அரசாங்கத்தை காப்பாற்றுவதற்கான போராட்டத்திலேயே காலத்தைக் கடத்தியது. அதுதான், 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும், கடந்த பொதுத் தேர்தலிலும் கூட்டமைப்பின் பின்னடைவுக்கு காரணமானது. அந்தப் பின்னடைவை, அரச ஆதரவுக் கட்சிகள் சில அறுவடை செய்தும் கொண்டன. 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 16 பாராளுமன்ற உறுப்பினர்களை வென்றிகொண்டிருந்த கூட்டமைப்பு கடந்த பொதுத் தேர்தலில் 10 உறுப்பினர்களுக்குள் சுருங்கியா. ஆறு உறுப்பினர்களின் இழப்பு என்பது, பாரிய வீழ்ச்சியாகும்.

ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கும் வந்த பின்னரும், சிங்கள பௌத்த அடிப்படைவாதம் என்கிற ஒன்றை இலக்கை முன்னிறுத்திக் கொண்டிருந்தார்கள். அதனால், நாட்டின் பொருளாதாரம், சமூக அபிவிருத்தி உள்ளிட்ட அடிப்படையான எவை பற்றியும் அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. அதனால் அவர்களை, கடந்த ஆண்டு தென் இலங்கை மக்களே விரட்டியடிக்கும் நிலை ஏற்பட்டது. அத்தோடு, கொரோனா தொற்று என்கிற நிலை மக்களின் பொருளாதாரத்தை முழுவதுமாக முடக்கியது. அதன் பின்னர், ராஜபக்ஷக்கள் நாட்டை திவாலாக்கிவிட்டு ஓடியதனாலும் மக்களின் மீதான பொருளாதாரச் சுமை என்பது தலைநிமிர முடியாதளவுக்கு அதிகரித்தது. அப்படியான சூழலில், தமிழ்த் தேசியக் கட்சிகளின் மாய்மாலங்களை கேட்பதற்கான சூழல் இல்லாமல் போனது. அதிக தருணங்களில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒலிவாங்கியின் முன்னால் மணிக்கணக்கில் வீர வசனம் மட்டுமே பேசுவதற்கு தகுதியானவர்களாக இருக்கிறார்கள். அதனைவிடுத்து, தமிழ் மக்களின் அரசியல் இலக்குகளை அடைவதற்கான செயற்திட்டங்களோ, அதனை நோக்கி பயணிப்பதற்கான அர்ப்பணிப்பையோ வெளிப்படுத்துவதில்லை. இவ்வாறான நிலை மக்களை இன்னும் இன்னும் சோர்வடையச் செய்தது. அப்படியான சூழலில் மக்களின் பெரும் பங்களிப்போடு கடந்த காலங்களில் எழுந்த போராட்டங்கள் மெல்ல மெல்ல காணாமற்போகத் தொடங்கின. இன்றைக்கும் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாகப் போராடத்தான் செய்கிறார்கள். ஆனால், அதில், மக்களின் பங்களிப்பின் அளவுக்கு என்பது வெகுவாக குறைந்துவிட்டது. கடந்த காலங்களில் ஒரு போராட்டக் களத்தை நோக்கி ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வந்தார்கள். ஆனால், இன்றைக்கு அது சில நூறாக சுருங்கி விட்டது. ஏன், சில தருணங்களில் நாற்பது, ஐம்பது பேர் என்ற அளவுக்குள் சுருங்கி விட்டது. தமிழ்த் தேசிய அரசியல் என்பது அநீதிகளுக்கு எதிரான அர்ப்பணிப்பான போராட்டங்களினால் எழுந்து வந்தது. ஆனால், இன்றைக்கு தங்களை தமிழ்த் தேசியக் கட்சிகளாக, இயக்கங்களாக, தலைவர்களாக முன்னிறுத்தும் பெரும்பாலானோரிடம் அர்ப்பணிப்பு என்ற ஒன்றைக் காணவே முடியாது. மாறாக, பதவி பகட்டுக்காக தமிழ்த் தேசிய அரசியலைக் கருவியாக அவர்கள் கையாள்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட மனிதச் சங்கிலிப் போராட்டம் ஏன் தோல்வி கண்டது? அங்கு மக்களை திரட்ட முடியாமைக்கான காரணங்கள் என்ன? என்றெல்லாம் இந்தக் கட்சிகள் சிறிதும் யோசிக்கத் தலைப்படவில்லை. மாறாக, போராட்டத்தின் தோல்விக் கணத்தினை மறைப்பதற்காக அவசர அவசரமாக கதவடைப்பு போராட்டம் என்ற அறிவித்தலை விடுத்திருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் பலர் வயது மூப்பினால் அல்லாடுகிறார்கள். அவர்களினால் அதிக நேரம் போராட்ட களத்தில் நிற்க முடியாது. கட்சிக்காரர்களையோ, ஆதரவாளர்களையோ திரட்டுவதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுப்பதில்லை. மாறாக, பெயருக்கு போராட்ட அறிவித்தலை விடுத்துவிட்டு, அரை மணிநேரம் போராட்டக் களத்துக்கு வந்துவிட்டு, ஊடகங்களிடம் ஏதாவது பேசிவிட்டு சென்றால் போதுமானது என்று நினைக்கிறார்கள். ஏனெனில், மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாமே பங்கு பற்றின. ஒவ்வொரு கட்சியும் 500 பேரவை அழைத்து வந்திருந்தால்கூட போராட்டக்களத்தில் 3,000 பேராவது திரண்டிருப்பார்கள். அதனைப் பார்த்து மக்களும் வந்திருப்பார்கள். ஆனால், ஒவ்வொரு கட்சியும் இருபது முப்பது பேரோடு போராட்டக் களத்திற்கு வருகிறார்கள். அப்படியான இடத்தில் எப்படி மக்கள் நம்பிக்கை கொண்டு வருவார்கள்?

மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் மக்கள் பங்களிப்பினை குறித்து கட்சிகளை நோக்கி கேள்வி எழுப்பியதும், தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மக்களின் மேல் குற்றஞ்சாட்டுகிறார்கள். போராட்டம் அறிவிக்கப்பட்டால் மக்கள் பெருவாரியாக வர வேண்டும் என்ற தோரணையிலான அணுகுமுறையாக இருக்கின்றது அது. போராட்டத்தின் நோக்கம் பற்றி தெளிவுபடுத்தி மக்களைத் திரட்டுவதற்கான எந்த எத்தணிப்பையும் எடுக்காமல் விட்டுவிட்டு, மக்கள் மீது குற்றஞ்சாட்டும் நிலை என்பது கட்சிகளின் அபத்தமான அரசியலாகும். தங்களின் அரசியல் தோல்விகளை மறைப்பதற்காக கதவடைப்பு போராட்டத்தை அவசரமாக அறிவிப்பது என்பது, மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் பொறுப்பற்ற செயல் என்றே சொல்ல வேண்டியிருக்கின்றது.

ஜனநாயக போராட்டத்தில் கதவடைப்பு போராட்டம் என்பது ஒரு வடிவம். ஆனால், அது, மூன்றாம் நான்காம் நிலையில் வருவது. கூட்டமாக திரளுதல், பேரணியாக எழுதல், மனிதச்சங்கிலி என்ற தொடர் போராட்டங்களுக்குப் பின்னரே, கதவடைப்பு என்ற போராட்ட நிலையை எட்ட வேண்டும். ஏனெனில், கதவடைப்பு போராட்டம் பிள்ளைகளின் கல்வியை குலைக்கும். பொருளாதார முன்னெடுப்புக்களைத் தடுக்கும். மருத்துவ, போக்குவரத்து சேவைகளை பாதிக்கும். குறிப்பாக, அன்றாடம் காய்ச்சிகளின் வாழ்வை மிக மோசமாக பாதிக்கும். ஏனெனில். ஒவ்வொரு நாளும் தொழிலுக்கு சென்றால்தான் வயிறு நிறையும் என்கின்ற நிலையில் இங்கு ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் கணக்கில் எடுக்காமல், கதவடைப்பு போராட்டத்தை அறிவிப்பது அபத்தமானது. ஏனெனில், போராட்டத்தை அறிவிக்கும் தலைவர்களோ, அவர்களின் குடும்பங்களோ அன்றாடம் காய்ச்சிகள் இல்லை. அவர்களுக்கு வருமான வழிகள் நிறைய இருக்கின்றன. அப்படியான நிலையில், தங்களின் தலைமைத்துவ தோல்வி, பலவீனங்கள், செயற்பாடற்ற தன்மை, மக்களிடம் சந்தித்து நிற்கின்ற அதிருப்தி ஆகியவற்றை சமாளித்து மறைப்பதற்காக கதவடைப்பு என்ற போராட்ட வடிவத்தை தேர்ந்தெடுக்கிறார்கள். அது தமிழ்த் தேசியக் கட்சிகள், தலைவர்களின் தோல்வி. அந்தத் தோல்வி கால ஓட்டத்தில் தமிழ் மக்களை மிக மோசமாக பாதிக்கும்.

## கடிதங்கள்

### இரண்டு நாவல் மரங்களை அகற்ற கோரிக்கை




கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தில் பட்டுப்போய் ஆபத்தாக காணப்படுகின்ற மரங்களை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தில் இரண்டு பாரிய நாவல் மரங்கள் பட்டுப்போன நிலையில் காணப்படுகின்றன.

தற்போது பருவமழை ஆரம்பித்து காற்று மற்றும் பல்வேறு அனர்த்தங்கள் ஏற்படும்போது இந்த மரங்களினால் பாரிய ஆபத்துக்கள் ஏற்படும் என்றும் இந்த மரங்களை அகற்றுவதற்கு உரிய தரப்புகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பயணிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடித்துள்ளனர்.


குறித்த பேருந்து நிலையத்தில் நாளாந்தம் சுமார் 1,000க்கும் மேற்பட்ட பயணிகள் வந்து செல்வதுடன், பெருமளவான வாகனங்களும் தரித்து செல்கின்றன.

எனவே, குறித்த பேருந்து நிலையத்தின் மையத்தில் காணப்படுகின்ற இரண்டு பாரிய மரங்களையும் அகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யது பாஸ்கரன்

கொட்டாஞ்சேனை சாயி சரணாலயத்தில்

# 14ஆம் திகதி பாதுகா அபிஷேகம்



குருபிரம்மா, குருவிஷ்ணு, குருமஹேஷ்வரர் இவர்களின் இணைந்த வடிவமான குரு ஸ்ரீ தத்தாத்ரேயரின் முதல் மானுட அவதாரமான ஸ்ரீபாத ஸ்ரீ வல்லபர் அவர்கள் பாதுகை ரூபத்தில் இலங்கை விஜயம் செய்ய இருக்கிறார்.

நிகழும் ஒக்டோபர் மாதம், 14ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாயி நாதனின் சரணாலயத்தில் ஸ்ரீ ருத்ர தத்த பாதுகா அபிஷேகமும் பூசையும் நடைபெற்று, அன்பர்கள் பாதுகை தரிசனமும் ஆசிகளும் கிடைக்கப் பெறுவார்கள்.

இந்தியாவில் ஆந்திரப் பிரதேசத்தில் காக்கி நாடாவில் அமைந்துள்ள 18 சத்திபீடங்களில் ஒன்றான பீடாபுரம் என்ற திருத்தலத்தில் திரு அப்பல ராஜ சர்மாவுக்கும் அகண்ட சௌபாக்கியவதி மாதா சுமதிக்கும் குழந்தையாக 13ஆம் நூற்றாண்டில் அவதரித்த ஸ்ரீபாத ஸ்ரீ வல்லபர் பல அதிசயங்களை அடியார்களுக்கு நிகழ்த்தினார், இன்னும் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். தனது 32ஆவது வயதில் குருவபுரம் என்னும் தலத்திற்கு அருகில் ஓடும் புனித கிருஷ்ண நதியில் ஜலசமாதியில் மறைந்தார். இன்று வரை சூட்சும உருவில் தன்னை மனதார நினைப்பவருக்கு நொடியில் பிரத்தியட்சமாகத் தனது அருளை வழங்கி அவர்களது கஷ்டங்களை நீக்குகிறார். இவரது திருமூர்த்தி அண்மையில் தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் அருகில் உள்ள மேல்சிறுணை மற்றும் மாருதிபுரம் எனும் கிராமங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டு கோவில்கள் அமைக்கப்பட்டன. ஸ்ரீ சக்ர தத்ராத்ரேயர், அக்கல்கோட் மஹராஜ் மற்றும் சீரடி சாயிபாபா ஆகியோரும் இங்கு வீற்றிருப்பது இத்தலங்களின் விசேடமாகும்.

மேல்சிருணையிலே 16 அடி உயரப் பஞ்சலோக ஸ்ரீ பாத வல்லபரும் ஒரு கோடி ஸ்ரீ சக்கரங்களும் பிரதிஷ்டை செய்யத் தெய்வ அருள் கூடியுள்ளது. இப்பிரமாண்டமான நிகழ்வுக்குப் பக்தர்களைத் தயார் செய்யும் முகமாக ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபரின் பாதுகை பூசை தமிழ்நாட்டின் பல இடங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஸ்ரீபாதரின் பாதுகைகள் சென்ற இடங்களிலெல்லாம் அவரது சைதன்யத்தை பக்தர்கள் பிரத்தியட்சமாக அனுபவித்து ஆனந்தமடைகிறார்கள்.

முதன்முதலாக, கடல் கடந்து இலங்கைத் திருநாட்டிற்கு வந்து கொழும்பு மாநகரில் உள்ள சாயிநாதனின் சரணாலயத்தில், தமது பாதுகை தரிசனம் மற்றும் பூசையை அடியவர்களுக்கு அருள ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் திருவுளம் கொண்டுள்ளார்.

சாயி சரணாலய அடியார்கள் தத்ராத்ரேய அவதாரியான சீரடி சாயி பாபாவையும் ஏனைய தத்த பரம்பரை சத்குருக்களான ஸ்ரீ பாதர், ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி சுவாமிகள், அக்கல் கோட் மஹராஜ் சுவாமி சமர்த்தர், ஸ்ரீ மாணிக்க பிரபு மஹராஜ், ஸ்ரீ கஜானன் மஹராஜ் மற்றும் ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி சுவாமி ஆகியோரையும் பக்தியுடன் வணங்கி அவர்கள் சரித்திரங்களைப் பாராயணம் செய்து, தமது அல்லல்கள் நீங்கி நலமாக வாழ்கிறார்கள் என்பது மெய். இவர்களின் மாசற்ற அன்பிற்கும் பக்திக்கும் மனம் நெகிழ்ந்தோ என்னவோ ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் தமது பொன்னான பாதுகைகளை இலங்கைக்கு அனுப்ப திருவுளம் கொண்டுள்ளார்.

சென்னை திருவாளர் சுந்தர் சாய், ஆத்மார்த்த சாய் சேவகர், காஞ்சிபுரம் ஸ்ரீ சக்ர தத்த க்ஷேத்ர பீடத்தின் அறங்காவலர் மற்றும் மாருதிபுரம் (உத்திரமேஷரூர்) ஸ்ரீ சுவாமி சமர்த்த சேவா சமஸ்தானம், ஸ்ரீ குருதத்த பாதுகா ஷேத்ர அறங்காவலராக விளங்குபவர். சென்னை அன்பர் ஸ்ரீ நாராயணன் ஆன்மீக பணியில் 'யூ டியூப் நாராயணன்' என்று அறியப்படுபவர், ஸ்ரீ குரு தத்த அவதாரங்களின் சரித்ராம்ருதம் பற்றிய சொற்பொழிவாளர், தினசரி பூஜைகள் மற்றும் தத்த பாதுகை ருத்ராபிஷேகம் செய்பவர். இந்த நபர்கள் இருவரும் அத்தி மரத்தாலான சுவாமி ஸ்ரீ பாதரின் பாதுகைகளுடன் ஒக்டோபர் 13ஆம் திகதி இலங்கை வருகிறார்கள்.

சனிக்கிழமை காலை 9 மணிக்கு, சாயி சரணாலயத்தில் பாதுகை பூசையும், தொடர்ந்து மகா பிரசாதமும் வழங்கும் நிகழ்வும் நடை பெறும். இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி தத்த குருவின் அருளாசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்பர்களை பணிவுடன் அழைக்கிறோம்.



# மாகாண மட்டத்தில் முதலிடம்

கிழக்கு மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட அகில இலங்கை அழகியல் நடனப் போட்டியில் திருகோணமலை கப்பல்துறை சரஸ்வதி வித்தியாலய மாணவர்கள் தப்பு நடனத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

அ . அச்சுதன்





# "ஆரோக்கியமிகு அகவையினை நோக்கிய" நிகழ்வு

களுவாஞ்சிகுடி நந்தவனம் சமூக நலன்புரி அமைப்புடன், மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த சிறுவர்-முதியோர் தின விழா செவ்வாய்கிழமை (10) இடம்பெற்றுள்ளது.

"ஆரோக்கியமிகு அகவையினை நோக்கி உலகளாவிய சிரேஷ்ட பிரஜைகளுக்கான மனித உரிமைகளை தலைமுறைகள் கடந்து நிறைவேற்றுதல்" எனும் தொனிப்பொருளில் அமைந்த இந்நிகழ்வில் மண்முனைதென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம் பிரதம அதிதியாக கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

வ.சக்தி



# 1,000 மூக்குக் கண்ணாடிகள் இலவசம்




அவுஸ்திரேலிய Global Hand Charity அமைப்பின் அனுசரணையுடன் 1,000 மூக்குக் கண்ணாடிகளை கல்முனை றொட்டரி கழகம் இலவசமாக வழங்கவுள்ளது.

கண்ணாடிக்கான தேவையிருந்தும் அதனைப்பெற்றுக்கொள்ள வசதியில்லாத வறுமைக்கோட்டின் கீழ் இருப்பவர்களுக்கு இக்கண்ணாடிகள் வழங்கப்படும் என்று கல்முனை ரோட்டரி கழக பிரமுகர் தெரிவித்துள்ளார்.

இவ்வேலைத்திட்டம் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் அவுஸ்திரேலிய வைத்தியர்களினால் கல்முனை கண் வைத்தியர்களின் பங்களிப்புடனும் 2024 ஜனவரி 26,27ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்படும்.

வி.ரி. சகாதேவராஜா




# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்




கிண்ணியா- உப்பாறு வைஷ்ணவி வித்தியாலயத்தின் பின்தங்கிய கிராமப்புற பாடசாலை மாணவர்களின் நலன் கருதி அவுஸ்திரேலியாவை சேர்ந்த விக் மற்றும் கரேன் ஆகியோரின் நிதி அனுசரணையில் திருகோணமலை ரோட்டரி கழகத்தினால் பாடசாலையில் கல்வி பயிலும் 69 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் (10) செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் திருகோணமலை ரோட்டரி கழகத்தின் தலைவர் எஸ்.சௌந்தரராஜன் மற்றும் கழக அங்கத்தவர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

முதலாம் தரம் முதல் ஒன்பதாம் ஆண்டு வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கே கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அப்துல்சலாம் யாசீம்

# சுகாதார நிலையங்கள் கையளிப்பு



நுவரெலியா - செங்கூஸ் (St Clair), கிரேட் வெஸ்டர்ன் தோட்டங்களிலுள்ள தாய் -சேய் சுகாதார நிலையத்தை (UN-Habitat, KOICA) "கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் நிதியுதவியுடன், 10 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு செவ்வாய்க்கிழமை (10) உத்தியோக பூர்வமாக பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

டீ. சந்ரு, எஸ். கே. குமார்





# நடந்து சாதனை படைக்க முயற்சி



மாத்தறை - அக்குரஸ்ஸையில் இருந்து யாழ்ப்பாணம் வரையில் நடந்து சென்று, திரும்பி நடந்து வந்து சாதனை படைக்கும் முயற்சியில் படல்கும்புரவைச் சேர்ந்த எஸ்.பாலகுமார் இறங்கியுள்ளார்.

மாத்தறை- யாழ்ப்பாணம் இரு வழியாக 3,089 கிலோ மீற்றர் தூரமாகும். பயணத்தை ஆரம்பித்து படல்கும்புர நகரை கடந்துச் சென்ற போது, படல்கும்புர பிரதேச செயலாளர் காரியாலயத்தில் சேவையாற்றுவோர் அவரை வரவேற்று உற்சாகமூட்டியுள்ளனர்.

சுமணசிறி குணதிலக்க





# மீளாய்வுக் கூட்டம்





கல்முனை சுகாதார பிராந்தியத்திற்குட்பட்ட நிறுவனத் தலைவர்களுக்கிடையிலான மீளாய்வுக் கூட்டம் பணிமனையின் கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (09) நடைபெற்றுள்ளது.

குறித்த கூட்டத்தில் சமகால பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் சுகாதார கட்டமைப்பைக் கொண்டு செல்லும் விதம் தொடர்பாகவும் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளைத் தீர்த்து வினை திறனான சேவையை வழங்குவது தொடர்பிலும் கட்டுமான பணிகளைத் துரிதப்படுத்துவது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

ஏ.எல்.எம்.ஷினாஸ்



அமெரிக்கா

# களமிறங்குகிறது அமெரிக்க சிறப்புப் படை

காசாவில் ஹமாஸ் அமைப்பினரால் பணயக்கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டுள்ள அமெரிக்கர்களை மீட்கும் பணிகளுக்காக அமெரிக்காவின் சிறப்புப் பயிற்சிபெற்ற படைகள் களமிறங்கியுள்ளன.

இஸ்ரேல் மீது ஹமாஸ் இயக்கத்தினர் கடந்த 7ஆம் திகதி திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து, இஸ்ரேல் போர் பிரகடனம் அறிவித்ததைத் தொடர்ந்து பயங்கரமாகப் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலை சேர்ந்த மக்களை பணயக் கைதிகளாக கடத்திச் சென்று பாலஸ்தீன மக்களுக்கு எச்சரிக்கை வழங்காமல் தாக்குதல் நடத்தினால் பிடித்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகளை கொலை செய்வோம் என எச்சரித்துள்ளனர்.

இந்நிலையில், ஹமாஸ் அமைப்பினரால் காசா நகரில் பிடித்து வைத்துள்ள பிணைக் கைதிகளை மீட்கும் நடவடிக்கையில் அமெரிக்க சிறப்பு படைகள் விரைவில் களமிறங்களாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காசா

# மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன



பாலஸ்தீன ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு, இஸ்ரேல் மீது திடீரென நடத்திய தாக்குதலில் 1000க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் பலியானார்கள். இதை தொடர்ந்து இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பை முற்றிலும் அழிக்க போவதாக கூறி போர் தொடர்ந்திருக்கிறது.

தொடர்ச்சியாக போர் நடைபெற்று வருவதால் படுகாயமடைந்தவர்களால் காசா மருத்துவமனைகள் நிரம்பி காணப்படுகின்றன. படுக்கைகள், மருந்துகள் இல்லாததால் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் தவித்து வருகின்றனர். 10 மணி நேரம் மட்டுமே மின் விநியோகம் நீடிக்கும் என்பதால் அத்தியாவசிய சேவைகள் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. காசாவில் இலட்சக்கணக்கான மக்கள் குடிநீர், உணவு இன்றி ஏற்கெனவே தவித்து வருவது குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கா

# ஸ்கை டைவிங் மூதாட்டி மரணம்

அமெரிக்காவில் 104 வயது மூதாட்டியான டோரத்தி ஹர்ஃப்னர் என்பவர் கடந்த 1ஆம் திகதி ஸ்கை டைவிங் செய்து உலக சாதனை படைத்தார். இல்லினாய்ஸின் ஒட்டாவாவில் உள்ள ஸ்கை டைவ் சிகாகோவில் ஒரு விமானத்தில் இருந்து 13,500 அடி உயரத்திலிருந்து குதித்து சாதனை படைத்தார். இதனையடுத்து, டோரத்தி உலகின் மிகவும் மூத்த ஸ்கை டைவர் என்று கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்தார்.

இந்நிலையில், கின்னஸ் சாதனை படைத்து ஒரு வாரம் மட்டுமே ஆன நிலையில், மூதாட்டி டோரத்தி உயிரிழந்துள்ளார். அவரது மரணத்திற்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

# “இஸ்ரேலுக்கு இந்திய மக்கள் உறுதியான ஆதரவு”



இஸ்ரேல் நாட்டின் மீது பலஸ்தீனத்தை சேர்ந்த ஹமாஸ் தீவிரவாதிகள் கடந்த 7ஆம் திகதி திடீர் தாக்குதல் நடத்தினர். சுமார் 5 ஆயிரம் ரொக்கெட் ஏவுகணைகளை வீசி தாக்குதலை இஸ்ரேல் மீது ஹமாஸ் குழுவினர் தொடங்கினர். இதனால், இரு நாடுகளுக்கும் இடையே போர் மூண்டுள்ளது. பதிலுக்கு இஸ்ரேலும் தனது தீவிர தாக்குதலை தொடங்கியுள்ளது.

இந்த நிலையில், பிரதமர் நரேந்திர மோடியை, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். அப்போது, இஸ்ரேலில் உள்ள நிலைமை குறித்து பிரதமர் மோடியிடம், நெதன்யாகு விளக்கினார்.

இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் “பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் தொலைபேசி அழைப்புக்கும், இஸ்ரேலில் தற்போதைய நிலைமை குறித்து தெரிவித்ததற்கும் நன்றி. இந்த கடினமான நேரத்தில் இந்திய மக்கள், இஸ்ரேலுடன் உறுதியாக நிற்கின்றனர் என்றும், தீவிரவாதத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் வெளிப்பாடுகளிலும் இந்தியா கடுமையாகவும் சந்தேகத்துக்கு இடமின்றியும் கண்டிப்பதாகவும் நெதன்யாகுவிடம் உறுதிபட தெரிவித்துள்ளேன்.” என பதிவிட்டுள்ளார்.



கேரளா

# விற்காத லொட்டரிக்கு ஒரு கோடி ரூபாய் பரிசு

உலக நாடுகளில் பலவிதமான அதிர்ஷ்ட இலாபச் சீட்டுகள் விற்பனை செய்யப்பட்டு பலரையும் அதிர்ஷ்டசாலிகளாக மாற்றி வருகிறது.

அந்தவகையில், அதிர்ஷ்ட இலாபச் சீட்டை தொடர்ந்து வாங்குபவர்களுக்கு ஒருமுறை கூட பரிசு கிடைக்காமல் போகலாம். ஆனால், இலாபச் சீட்டுகளையே வாங்காதவர்களுக்கு அதிர்ஷ்டம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டிய சம்பவமும் நடந்துள்ளது.


அந்தவகையில் இந்தியாவின் கேரள மாநிலத்தை சேர்ந்த கங்காதரன் என்பவர் அதிர்ஷ்ட இலாபச்சீட்டு முகவராக பணியாற்றி வருகிறார். அவர் விற்பனை செய்த அதிர்ஷ்ட இலாபச்சீட்டுகளில் மாநில அரசாங்கத்தின் ஃபிப்டி ஃபிப்டி டிக்கெட் ஒன்று மட்டும் விற்பனையாகமல் இருந்துள்ளது. அந்த இவர் வைத்திருந்துள்ளார். அந்த சீட்டுக்கு 1 கோடி ரூபாய் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிசு வென்றவருக்கு தொலைபேசி வாயிலாக அழைக்கையில் அவர் இது போலி, ஏமாற்று வேலை ஸ்பேம் கால் என்று அழைப்பை துண்டித்துள்ளார்.

அதிர்ஷ்ட இலாபச்சீட்டு நிறுவன அதிகாரிகள் மீண்டும் வேறு எண்ணில் இருந்து முயற்சி செய்து பரிசு விழுந்த செய்தியை தெரிவித்துள்ளனர்.

புது டெல்லி

# நியூஸ்க்ளிக் நிறுவனருக்கு விளக்கமறியல் நீடிப்பு



புதுடெல்லியின் பாட்டியாலா ஹவுஸ் நீதிமன்றம், நியூஸ் க்ளிக் நிறுவனர் புர்கயாஸ்தா மற்றும் சக்ரவர்த்தி ஆகியோரை 10 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்க அனுமதி வழங்கியுள்ளது.

நியூஸ்க்ளிக் மற்றும் அதன் பத்திரிகையாளர்களுடன் தொடர்புடைய 30க்கும் மேற்பட்ட இடங்களில் பொலிஸார் கடந்த வாரம் சோதனை நடத்தியுள்ளனர். இந்த சோதனையை தொடர்ந்து, நியூஸ் கிளிக் நிறுவனர் புர்கயாஸ்தா மற்றும் சக்ரவர்த்தி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த வழக்கு தொடர்பாக பல பத்திரிகையாளர்களை புதுடெல்லியில் பொலிஸார் விசாரித்து புதுடெல்லியில் உள்ள ‘நியூஸ்க்ளிக்’ அலுவலகத்துக்கு சீல் வைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பின்னர் அந்த இவருரையும் பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். பின்னர் அவர்களை ஏழு நாள் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. சீனாவுக்கு ஆதரவாக செய்தி வெளியிடவே ‘நியூஸ்க்ளிக்’ நிறுவனம் பணம் வாங்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# கௌரவித்து ஊர்வலம்

■ எம்.எஸ்.எம். நூர்தீன்

காத்தான்குடி அல்கிறா மகா வித்தியாலயத்திலிருந்து மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்று தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களையும், மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றிய மாணவர்களையும் கௌரவிக்கும் வைபவமானது புதன்கிழமை (11) நடைபெற்றுள்ளது.



# கராத்தேயில் பற்றிமாவுக்கு முதல் பதக்கம்

■ வி.ரி. சகாதேவராஜா

அகில இலங்கை ரீதியில் கல்முனை கல்வி வலயத்துக்கு கராத்தேயில் முதல் பதக்கம் கிடைத்துள்ளது. கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவன் கேதீஸ்வரன் ரோஹித் இந்த பதக்கத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

காலியில் அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய கராத்தே போட்டியில் ரோஹித் 16 வயதுக்குட்பட்ட பிரிவினர்களுக்கிடையிலான குமித்தே போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

இம்மாணவன் 36 வீரர்களுடன் போட்டியிட்டு மூன்றாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

உலகக் கிண்ணம்:

# இலங்கையை துரத்தியடித்த பாகிஸ்தான்

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், ஹைதரபாத்தில் திங்கட்கிழமை (09) நடைபெற்ற இலங்கை உடனான போட்டியில் பாகிஸ்தான் வென்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 344/9 (50 ஓவ. )

(துடுப்பாட்டம்: குசல் மெண்டிஸ் 122 (77), சதீர சமரவிக்கிரம 108 (89), பதும் நிஸங்க 51 (61) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹஸன் அலி 4/71, ஹரிஸ் றாஃப் 2/64, மொஹமட் நவாஸ் 1/62, ஷடாப் கான் 1/55)

பாகிஸ்தான்: 345/4 (48.2 ஓவ. )

(துடுப்பாட்டம்: மொஹமட் றிஸ்வான் ஆ.இ 131 (121), அப்துல்லாஹ் ஷஃபிக் 113 (103) ஓட்டங்கள். பந்துவீசு: டில்ஷான் மதுஷங்க 2/60, மகேஷ் தீக்ஷன 1/59)

போட்டியின் நாயகன்: மொஹமட் றிஸ்வான்

நேற்று முன்தினம் நடைபெற்ற மற்றைய போட்டியில் பங்களாதேஷை நடப்புச் சம்பியன்கள் இங்கிலாந்து வென்றிருந்தது.

இந்நிலையில், லக்னோவில் இன்று வியாழக்கிழமை (12) பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் தென்னாபிரிக்காவும், அவுஸ்திரேலியாவும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கால்பந்தாட்டத் தொடரில்

# யாழ். சென். பற்றிக்ஸ் சம்பியன்




■ பு. கஜிந்தன்

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டத் தொடரில் 20 வயதுக்குட்பட்டோர் பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனானது.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கொழும்பு சாஹிராக் கல்லூரியுடனான இறுதிப் போட்டியில் பெனால்டியில் 4-3 என்ற ரீதியில் வென்றே பற்றிக்ஸ் சம்பியனானது.

# ஓய்வு பெற்ற ஹஸார்ட்



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் முன்னாள் முன்கள வீரரான ஈடின் ஹஸார்ட், கால்பந்தாட்டத்திலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

செல்சியிலிருந்து கடந்த 2019ஆம் ஆண்டு ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட்டில் இணைந்த 32 வயதான ஹஸார்ட் 54 லீக் போட்டிகளிலேயே விளையாடியிருந்த நிலையில், கடந்த பருவகால முடிவில் கழகத்தை வெளியேறியுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 12 ஒக்டோபர் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.